**செய்தி வெளியீடு 118** **நாள்.28.02.2017**

| |
|---|
| **மாண்புமிகு அம்மாவின் அரசின் மீசல்ஸ் ரூபெல்லா தடுப்பூசி திட்டத்தில் 85 இலட்சம் குழந்தைகள் இதுவரை பயனடைந்துள்ளனர்!** |
| **இத்தடுப்பூசி பக்கவிளைவுகளற்றது, பாதுகாப்பானது!** |
| **தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோயை முற்றிலுமாக ஒழிக்க ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்களின் பங்களிப்பு இன்றியமையாதது!** |
| **மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் தகவல்!** |

தமிழகத்தில் தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய்களை முழுமையாகத் தடுக்கும் உயரிய நோக்கில் **மாண்புமிகு அம்மாவின் அரசு 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கு** பிப்ரவரி 6 ம் தேதி முதல் தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி தொடர்ந்து வழங்கிவருகிறது. இத்தடுப்பூசி இதுவரை 85 இலட்சம் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இம்முகாம் குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (28.02.2017) ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை வளாகத்தில் தொடர்புடைய துறைகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஒரே சமயத்தில் இந்த தடுப்பூசியை அளிக்கும்போதுதான் போலியோவைப் போன்று தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய்களை தமிழகத்திலிருந்து முற்றிலுமாக ஒழிக்க முடியும். எனவே, இதுவரை தடுப்பூசி வழங்கப்படாத குழந்தைகளுக்கு ரூபாய் 1000 மதிப்புள்ள இத்தடுப்பூசியை எவ்வித கட்டணமும் இல்லாமல் வழங்கும் முகமாக மார்ச் 1–ம் தேதி முதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், அரசு மருத்துவமனைகள் அரசு மற்றும் தனியார் குழந்தைகள் நல மருத்துவமனைகளிலும் வழங்கப்பட உள்ளது. பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களிலும் தொடர்ந்து முகாம்கள் நடத்தப்படும்.

உலக சுகாதார நிறுவனத்தின் இந்திய பிரதிநிதி டாக்டர். ஹெங்க் பெக்டேம் (Dr. Henk Bekedam) அவர்கள் நேற்று சென்னை அரசு குழந்தைகள் நல மருத்துவமனையினை பார்வையிட்ட பின்பு செய்தியாளர்கள் சந்திப்பின்போது,

> ***"தட்டம்மை ரூபெல்லாவிற்கு போடப்படும் தடுப்பூசி இந்தியாவில், பூனேவில் உள்ள சீரம் இன்ஸ்டிடியூட்டில் தயாரிக்கப்படுகிறது. இத்தடுப்பூசி 100 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. உலக சுகாதார நிறுவனம் தடுப்பூசியை ஆய்வு செய்து 100 சதவீதம் பாதுகாப்பானது என்று சான்றிதழ் வழங்கியுள்ளது. தடுப்பூசி குறித்த தவறான தகவல்களை யாரும் நம்ப வேண்டாம். குழந்தைகள், சிறுவர்களுக்கு கண்டிப்பாக தடுப்பூசி போட வேண்டும்"***

என்று அவர் விடுத்த வேண்டுகோள் இங்கே நினைவுகூறத்தக்கது.

இந்த தடுப்பூசி போடுவதன் மூலம் பக்க விளைவுகளோ பாதிப்போ ஏற்படாது, மிகவும் பாதுகாப்பானது. இந்த தடுப்பூசியை வழங்குவதற்கு பெற்றோர்களிடமிருந்து எவ்வித ஒப்புதல் கடிதம் (Consent letter) பெற தேவையில்லை. எனவே, இந்த தடுப்பூசி முகாம் முற்றிலுமாக வெற்றியடைய பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்களின் பங்களிப்பு மிகவும் அத்தியாவசியமானது. எனவே, இத்தடுப்பூசி பற்றி சமூக வளைதளங்களில் உலாவரும் தவறான தகவல்களை யாரும் நம்ப வேண்டாம் என மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

இவ்வாய்வு கூட்டத்தில் பள்ளி கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. த. சபிதா, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் மரு. க. குழந்தைசாமி, மருத்துவ கல்வி இயக்குநர் மரு. நாராயணபாபு, மருத்துவம் மற்றும் ஊர கநலப் பணிகள் இயக்குனர் மரு. செங்குட்டுவன் உட்பட மருத்துவ உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

––**––

**வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம்,சென்னை.9**